# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 155 | செவ்வாய்க்கிழமை Tuesday | 01.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# காஞ்சியில் செமிகண்டக்டர் உற்பத்தி பூங்கா, கோவையில் டிஜிட்டல் நிதி மையம்

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் செமி-கண்டக்டர் மற்றும் மின்னணுவியல் உற்பத்திப் பூங்கா, கோயம்புத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் பல்முனை சரக்குப் போக்குவரத்து மையம் அமைப்பது தொடர்பாக பேரவை விதி எண் 110-இன் கீழ் முதல்வர் விஜய் சில முக்கிய அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.

முதல்வர் விஜய் பேரவையில் பேசுகையில், "தமிழகத்தில் செமி-கண்டெக்டர் துறையில் (Semiconductor Sector) அதிக அளவு முதலீட்டினை ஈர்க்கவும், இத்துறையில் நமது மாநிலத்தின் பங்கினை கணிசமான அளவு உயர்த்திடவும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுரமங்கலத்தில் Semiconductor & Electronics Manufacturing Park, ரூ.175 கோடி மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனம் மூலம் அமைக்கப்படும்.

இப்பூங்காவில், Semiconductor துறையில் புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஏதுவாக உலகத்தரம் வாய்ந்த, R&D – Research and Development வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் இத்துறையில் சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் வரை முதலீடுகள் ஈர்க்கப்படும். மேலும், சுமார் 5,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

கோவையில் டிஜிட்டல் நிதி மையம்:

நிதித் தொழில்நுட்ப (FinTech) புதுமைகளுடன் டிஜிட்டல் நிதிச் சேவைகளை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மூலம் கோயம்புத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் (Coimbatore FinTech Hub) பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

உலகத் தரத்திலான வசதிகள், அலுவலக இடங்கள், புத்தொழில் நிறுவனங்கள், நவீன ஆய்வகங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு போன்ற அதிநவீன வசதிகள் இம்மையத்தில் இடம்பெறும். இதன்மூலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில், நிதி மற்றும் நிதிநுட்பத் துறையில் உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கவும், நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும், உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

திருச்சியில் பல்முனை சரக்கு போக்குவரத்து மையம்

2026–27–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் முக்கிய இடங்களில் பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காக்கள் (Multi Model Logistics Parks), உலர் துறைமுகங்கள் (Dry Ports) அமைத்து முதலீட்டை ஈர்க்க அரசு முயற்சிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள மாவட்டப் பகுதிகளில் முக்கிய உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிகளவில் உள்ளதால், தமிழக தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மூலம் ஆய்வு மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயார்செய்து அதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் "பல்முனை சரக்கு போக்குவரத்து மையம் (Multi Model Logistics Hub)" ஒன்று அமைக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க.வில் இருந்து விலகுவதாக தோப்பு வெங்கடாசலம் அறிவிப்பு



ஈரோடு: திமுகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகுவதாக அதிமுக முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் அறிவித்துள்ளார். தேர்தலின்போது ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் காரணமாக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலில், ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தவர் தோப்பு வெங்கடாசலம். இதற்கு முன்பாக, அதிமுகவில் வருவாய்த் துறை அமைச்சராகவும், சுற்றுச்சூழல் துறை அமைச்சராகவும் இருந்துள்ளார்.

2016–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் பெருந்துறை தொகுதியில் வெற்றிபெற்ற தோப்பு வெங்கடாசலத்திற்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. 2021–இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட அதிமுகவில் வாய்ப்பு வழங்கபடவில்லை. இதனால், அந்த தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு டெபாசிட் இழந்த நிலையில், தனது ஆதரவாளர்கள் உடன் திமுகவில் இணைந்தார்.

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில், பெருந்துறை தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு 9 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோப்பு வெங்கடாசலம் தோல்வியடைந்தார்.

இந்த நிலையில் பெருந்துறையில் உள்ள தனது அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், திமுகவில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், " திமுகவின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் என்னை விடுவித்துக் கொள்ளும் கடிதத்தை திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அளிக்க இருக்கிறேன். என் மீது நம்பிக்கை வைத்து மாவட்டக் கழக பொறுப்பாளராகவும், பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகவும் வாய்ப்பு வழங்கினீர்கள். அதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், சட்டப்பேரவை தேர்தலின்போது ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் எனக்குள் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. இதனால் திமுகவில் பயணிக்க என் மனம் இடம்கொடுக்காத காரணத்தால், எனது அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

இப்போதைக்கு எந்த இயக்கத்திற்கும் செல்லக்கூடிய எண்ணம் எனக்கு இல்லை. நான் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாக தவறான செய்தியை சில ஊடகங்கள் ஒருவார காலமாக பரப்பி வந்தார்கள். ஒதுங்கும் அளவுக்கு நான் பற்றற்றவனும் கிடையாது; ஒதுக்கப்படுகிற அளவுக்கு நான் சத்தற்றவனும் கிடையாது. தற்போதைக்கு எந்த இயக்கத்திலும் சேருவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. தற்போதைக்கு அந்த மனநிலையில் நான் இல்லை.

முன்னாள் அமைச்சர் முத்துசாமியை பொறுத்தவரை எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்து அவரோடு பயணித்து வந்தவர். மிக மூத்த அரசியல்வாதி. அவர் அமைச்சராக இருந்த காலத்தில் நான் கல்லூரி மாணவர் தலைவராக இருந்து, அதிமுகவில் உறுப்பினராக சேர்ந்து பயணித்தேன். ஆரம்ப காலகட்டத்தில் எனக்கு கை கொடுத்தவர் அண்ணன் முத்துசாமி.

அவர் மீது எனக்கு என்றைக்கும் அளவுக்கு அதிகமான பற்றும் பாசமும் இருக்கிறது. அவர் என் மீது எந்தவித காழ்ப்புணர்ச்சியோ, நெருக்கடியோ கொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அவர் மீது எந்தக் குற்றச்சாட்டையும் கூறுவதற்கு நான் விரும்பவில்லை" என்று தோப்பு வெங்கடாசலம் தெரிவித்தார்.

# காணாமல் போன உறவுகளைத் தேடி நேபாளம் செல்வோருக்கு உதவ சிறப்புக் குழு; தமிழக அரசு அறிவிப்பு



சென்னை: நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி காணாமல்போனவர்கள் குறித்த விவரங்களை அறிய காத்மாண்டு செல்லும் உறவினர்களுக்கு உதவ தமிழ்நாடு அரசு சார்பில் 3 அலுவலர்கள் கொண்ட குழு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்குழு காத்மாண்டுவில் முகாமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "நேபாளத்துக்கு சுற்றுலா சென்றபோது, 26 ஆகஸ்ட் 2026 அன்று போட்டேகோஷி ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணாமல் போனதாகவோ அல்லது சிக்கித் தவிப்பதாகவோ தெரிவிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை, தமிழ்நாட்டை சேர்ந்த 21 சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டு, புதுடெல்லிக்கு அழைத்து வரப்பட்டு, பின்னர், அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இன்னும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 84 பயணிகள் குறித்த விவரங்கள் தொடர்ந்து தேடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சில விவரங்களை https://udb.nepalpolice.gov.np/disaster என்ற தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் நேபாள காவல்துறை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான விவரங்களை அறிய புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் கட்டுப்பாட்டு அறையை, 92895 16712 (Whatsapp / Call), 98685 30776 (Mobile No.) என்ற எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இது தொடர்பாக நேபாளத்துக்குச் செல்லும் உறவினர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் முதல்வர் விஜய்யின் உத்தரவின்பேரில், தமிழ்நாடு அரசின் மூன்று அலுவலர்கள் கொண்ட குழு காத்மண்டுவில் முகாமிட்டுள்ளது.

ஏ. சத்திய சிவம் (Mob No. 9868207259), பி. தினேஷ் கண்ணன் (Mob No. 9868530799), எஸ். அஜய் (Mob No. 9868224049) ஆகிய மூன்று அலுவலர்கள் காத்மாண்டுவிலிருந்து தேவையான உதவிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொள்வார்கள்.

முதல்வர் விஜய் உத்தரவின்பேரில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள், நேபாள அரசு, இந்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் காட்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, சாத்தியமான அனைத்து வழிகளிலும் இடைவிடாது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்," என்று தமிழக அரசின் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவை இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திறன் 1.0 ஹேக்கத்தான் போட்டி

## தொடர்ந்து 36 மணி நேரம் நடைபெற்றதில் 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் குழுவாக ஆர்வமுடன் பங்கேற்பு



கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களின் புதுமைச் சிந்தனை, தொழில்நு ட்பத் திறன் மற்றும் பிரச்சினை களுக்குத் தீர்வு காணும் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் கல்லூரி சார்பில் உள்நாட்டு ஹேக்கத்தான் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக திறன் 1.0 ஹேக்கத்தான் போட்டி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது...

குறிப்பாக 36 மணி நேர தொடர் ஹேக்கத்தானாக நடைபெற்றஇதல்,,வழக்கமான வகுப்பறைச் சூழலைத் தாண்டி, மாணவர்கள் தொடர்ந்து 36 மணி நேரம் தங்கள் குழுவினருடன் இணைந்து சிந்தித்து, திட்டமிட்டு, செயல்படுத்தி, சோதனை செய்து, தங்களது தீர்வுகளை முன்வைக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

ஹேக்கத்தானில் கணினி சார்ந்த படிப்புகளைப்பயிலும் மாணவர்களுடன், தகவல் தொழில்நுட்பம் சாராத பிற துறைகளைச் சேர்ந்த மாணவர்களும் இணைந்து பங்கேற்றனர். தலா 6 மாணவர்கள் கொண்ட குழுக்களாகப் பிரிந்து, வழங்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு புதுமையான யோசனைகளை மாணவர்கள் முன்வைத்தனர்.

இறுதியாக மாணவர்கள் உருவாக்கிய தீர்வுகளை தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய குழுவினர் மதிப்பீடு செய்து சிறந்த புதுமையான தீர்வுகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள்,மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன..

பரிசளிப்பு விழாவில்,இந்துஸ்தான் குழும நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், செயலாளர் மற்றும் நிர்வாகஅறங்காவலர் டாக்டர் பிரியா ,, கல்லூரி முதல்வர் மற்றும் நிகழ்ச்சியின் தலைவரான டாக்டர் பொன்னுசாமி ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கி கவுரவித்தனர்...

நிகழ்ச்சியை தகவல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் டாக்டர் சரவணன்,, துறையின் இணைப் பேராசிரியர்களான டாக்டர் கௌரி மற்றும் டாக்டர் சிவபிரிந்தா உட்பட , பல்வேறு துறைகளின் தலைவர்கள்,பேராசிரியர்கள் ஒருங்கிணைந்து இணைந்து நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர்.

# ஊத்துமலை அருகே இரதமுடையார் ஸ்ரீ ஜயனார் திருக்கோவில் கொடை விழா



தென்காசி மாவட்டம் ஊத்துமலை அருகே உள்ள இரதமுடையார் ஸ்ரீ ஜயனார் திருக்கோவிலில்கொடை விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழாவையொட்டி குற்றாலதீர்த்தம்,நாதஸ்வரம், செண்டை மேளம், வாழ்ப்பட்டி மேளம் மற்றும் வாணவேடிக்கையுடன் தீர்த்தம் அழைத்து வரப்பட்டு, சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து சாஸ்தா, பூர்ணகலா,புஷ்கலா மற்றும் பரிவார தேவதைகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

விழாவில் வில்லிசை, பக்திப் பாடல் கச்சேரி, நாதஸ்வர கச்சேரி,தரையாட்டம், புலியாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேளதாளம் முழங்க சாமிகள் ஊர் விளையாடுதல், சிவன் பொங்கல், கருக்கல் பூஜை, சாமி மயானம் சென்று வருதல், சாம பூஜை மற்றும் கள்ளர்வேட்டைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

விண்ணை அதிர வைக்கும் வகையில் நடைபெற்ற வாணவேடிக்கை நிகழ்ச்சி பக்தர்களை வெகுவாக கவர்ந்தது.

விழாவின் நிறைவாக மஞ்சள் நீராட்டு நிகழ்ச்சி நடைபெற்றதை தொடர்ந்து கொடை விழா இனிதே நிறைவடைந்தது.

விழா ஏற்பாடுகளை கோவில் தர்மகர்த்தா மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# கோவையில் நடைபெற்று வந்த தேசிய அளவிலான குதிரையேற்ற சாம்பியன்ஷிப் நிறைவு

## ஈக்வெஸ்ட்ரியன் சாம்பியன்ஸ் லீக்கில் சென்னை புல்ஸ் அணி சாம்பியன் பட்டத்தை வென்றது



கோவை மாவட்டம், வெள்ளானைப்பட்டி அருகே உள்ள மோலப்பாளையத்தில் கடந்த ஆகஸ்ட் 28ஆம் தேதி தொடங்கிய தேசிய அளவிலான ஈக்வெஸ்ட்ரியன் சாம்பியன்ஸ் லீக் குதிரையேற்ற போட்டிகளின் இறுதி சுற்று நேற்று நடைபெற்றது.

ஈக்வைன் ஸ்போர்ட்ஸ் இந்தியா ஃபெடரேஷன் சார்பில் நடத்தப்பட்ட இந்த தேசிய அளவிலான குதிரையேற்ற போட்டி, மோலப்பாளையத்தில் "பவர் ஹவுஸ்" மைதானத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட போட்டி அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் இப்போட்டியில் பங்கேற்றன. சென்னை புல்ஸ் தமிழ்நாடு, பெகாசஸ்ஸ்போர்ட்ஸ்கேரளா, பெங்களூரு நைட்ஸ் கர்நாடகா, கோல்கொண்டா சார்ஜர்ஸ் தெலங்கானா மற்றும் எலைட் ஈக்வெஸ்ட்ரியன்ஸ் மேற்கு வங்கம் ஆகிய அணிகள் பங்கேற்றன.

100 செ.மீ., 110 செ.மீ. மற்றும் 120 செ.மீ. என மூன்று பிரிவுகளில் ஷோ ஜம்பிங் போட்டிகள் நடைபெற்றன..

தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், சத்தியபாமா சட்டமன்ற உறுப்பினர், பிரபல திரைப்பட நடிகர்கள் ஆர்யா மற்றும் ஷாம் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

போட்டியின் நிறைவு மற்றும் பரிசளிப்பு விழாவில்,எஸ்.என்.ஆர் சன்ஸ் சாரிட்டபிள் டிரஸ்ட் நிர்வாகஅறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன், பி & எஸ் குரூப் ஆஃப் கம்பெனி நிறுவனத்தின் நிறுவனர் பிரியங்கா சுந்தர், ஈக்வெஸ்ட்ரியன் சாம்பியன்ஸ் லீக் தலைவர் ஏ.எஸ்.சக்தி பாலாஜி மற்றும் ஐஆர் ஏ பேஷன் ஸ்டுடியோ நிறுவனர் பாரதி பாலாஜி உள்ளிட்டோரும் நடிகர்கள் ஆர்யா மற்றும் ஷ்யாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐந்து அணிகளைச் சேர்ந்த குதிரையேற்ற வீரர்கள், தங்களது திறமையையும் குதிரைகளுடனான ஒருங்கிணைப்பையும் வெளிப்படுத்தி, பல்வேறு சவாலான தடைகளைத் தாண்டி சிறப்பாக போட்டியிட்டனர்.

இறுதிப் போட்டிகளின் முடிவில், கோல்கொண்டா சார்ஜர்ஸ் அணி 286 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்து ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசை வென்றது. பெங்களூரு நைட்ஸ் அணி 291 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசை வென்றது. 311 புள்ளிகளுடன் சென்னை புல்ஸ் அணி முதலிடத்தைப் பிடித்து, ஈக்வெஸ்ட்ரியன் சாம்பியன்ஸ் லீக் சாம்பியன் பட்டத்தை வென்றதுடன், ரூ.15 லட்சம் ரொக்கப் பரிசையும் தட்டிச் சென்றது.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நீலகிரி மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராஜா, வெற்றி பெற்ற அணிகள் மற்றும் வீரர்களை பாராட்டி, பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.



திங்கள்கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் 31.8.26 முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களின் சிறார்களை சைனிக் பள்ளியில் சேர்வதை ஊக்குவிக்கும் வகையில் கல்வி ஊக்க தொகைமானியத்தைமாவட்டவருவாய்அலுவலர்திரு.மா.வீராசாமிஅவர்கள்மாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில் வழங்கினார்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 31.8.26 நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மா.வீராசாமி அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

# கோவை இளம் தலைமுறையினர் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ள புத்தக வாசிப்பு அவசியம்

## சிந்தனை கவிஞர் கவிதாசன் பேச்சு



சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் நான்கு நூல்கள் அறிமுக விழா கோவையில் நடைபெற்றது. இளம் தலைமுறையினர் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ள புத்தக வாசிப்பு அவசியம் என விழாவில் சிந்தனை கவிஞர் கவிதாசன் உரையாற்றினார். கோவையில் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் எழுதிய 'வெற்றிப் படிக்கட்டுகள்', 'வெற்றியின் விதைகள் 100', சிகரம் தொடு' மற்றும் 'வெற்றிப்பாதை' ஆகிய நான்கு நூல்களின் அறிமுக விழா கோவை காந்திபுரத்தில் உள்ள ஆர்.வி. ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் முனைவர் விஸ்வநாதன் வரவேற்புரையாற்றினார். கோவை ஞான சஞ்சீவனம் குருகுலம் நிறுவனர் ஸ்ரீ சசிகுமார் வாழ்த்துரை வழங்கினார். 'வெற்றிப்பாதை' நூலுக்கு கோவை பயனீர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சச்சிதானந்தர், இதிகாச மாமணி முனைவர் முருகேசன் அறிமுக உரையாற்றினர்.

மன்னார்குடியைச் சேர்ந்த தமிழ் இலக்கிய ஆய்வறிஞரும் நூலாசிரியருமான பத்மாவதி, 'வெற்றிப் படிக்கட்டுகள்' நூல் குறித்தும், கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி தமிழாசிரியர் முனைவர் கருணாநிதி, 'வெற்றியின் விதைகள் 100' நூல் குறித்தும்அறிமுகஉரையாற்றினர். அதே பள்ளியின் தமிழாசிரியர் முனைவர் பொன்.சங்கர், 'சிகரம் தொடு' நூல் குறித்து அறிமுக உரையாற்றினார்.

விழாவில் நூல்களின் எழுத்தாளரும் ரூட்ஸ் நிறுவனங்களின் இயக்குநரும், சிந்தனைக் கவிஞருமான டாக்டர் கவிதாசன் பேசுகையில், இன்றைய தனிக்குடும்ப வாழ்க்கை முறையில் இளம் தலைமுறையினர் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் இருந்த வழிகாட்டுதலும், எதையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவமும் தற்போது குறைந்து வருவதால், சில நேரங்களில் இளைஞர்கள் ஆபத்தான முடிவுகளை எடுக்கும் நிலை ஏற்படுகிறது என்றார்.எனவே, இளம் தலைமுறையினரிடம் தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் வளர்க்க வேண்டியது அவசியம் என்றும், குறிப்பாக தன்னம்பிக்கை,தலைமைப்பண்பு மற்றும் வாழ்க்கையை எதிர்கொள்ளும்திறனை வளர்க்கும் புத்தகங்களைதொடர்ந்து வாசிக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"தொட்டுத் தொட்டுப் பார்த்தால் காகிதம்; தொடர்ந்து படித்தால் வெற்றியின் ஆயுதம்" என்ற கருத்தை முன்வைத்த கவிதாசன், புத்தக வாசிப்புஅறிவைவளர்ப்பதோடு மட்டுமின்றி, வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் பக்குவத்தையும் தன்னம்பிக்கையையும் வழங்கும் என தெரிவித்தார்.நான்கு நூல்களின் அறிமுக விழாவில் இலக்கிய ஆர்வலர்கள், கல்வியாளர்கள், வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் எந்தவிதமான விவாதமும் இன்றி 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளது; முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பேச்சு



மதுரையில் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற 'பார்லிமென்டில் நடந்தது என்ன?' தலைப்பில் நடை பெற்ற கருத்தரங்கிற்கு நல்லமணி மதுரை மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் வரவேற்புரையாற்றினார் .

கருத்தரங்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பேசினார். அவர் கூறுகையில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் எந்தவிதமான விவாதமும் இன்றி 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டினார். வந்தேமாதரம் பாடலில் 6 பத்திகள் உள்ள நிலையில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 2 பத்திகளை மட்டும்பாட முடிவுசெய்யப்பட்டதாக தெரிவித்தார். "தமிழ்த்தாய் வாழ்த்து, வந்தேமாதரம், தேசியகீதம் ஆகியவற்றை பாடினால் சுமார் 5 நிமிடங்கள் அனைவரும் நிற்க வேண்டியிருக்கும். வேண்டுமென்றே சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் இது தொடர்பான மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது," என ப.சிதம்பரம் தெரிவித்தார். மேலும், தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தமிழக சட்டசபையில் எதிரான தீர்மானத்தை ஆதரித்த முன்னாள் முதல்வர் ஸ்டாலினை பாராட்டிய அவர், தொகுதி மறுவரையறையை ஆதரிக்கும் அ.தி.மு.க.வையும் விமர்சித்தார். எம்.பி.,க்கள் சு.வெங்கடேசன், நவாஸ் கனி , பூமிநாதன் மதிமுக மாநில துணை பொதுச் செயலாளர் நூர் முகமது காங்கிரஸ்வடக்கு மாவட்ட தலைவர், தமிழ்செல்வன் காங்கிரஸ்முன்னாள் தலைவர் திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், ஆகியோர் கலந்து கொண்டனர். மாநகராட்சி காங்., குழுத் தலைவர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

# நாட்டார்பட்டி ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் 3ம் ஆண்டு விழாவை முன்னிட்டு முப்பெரும் விழா



தென்காசி மாவட்டம்-பாவூர்சத்திரம் அருகே சென்னெல்- நாட்டார்பட்டி ஆதிபராசக்தி வழிபாட்டு மன்ற 3 ம் ஆண்டுவிழா மற்றும் கஞ்சி கலய விழா, பள்ளி மாணவர்களுக்கு பரிசு அளிப்பு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது

விழாவில் சக்தி கொடியேற்றி அம்மனுக்கு மலர் குங்கும அர்ச்சனை செய்து வழிபாடு நடந்தது இந்த வழிபாட்டில் உலகில் விவசாயம் தொழில் வளம் செழிக்கவும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் பள்ளி மாணவர்கள் சிறந்து விளங்கவும், உலகில் இயற்கை சீற்றங்கள் தணிந்து அமைதி நிலவவும் ஆன்மீகம் பெருகவும் சிறப்பு பூஜைகள் சங்கல்பம் நடைபெற்றது .கஞ்சி கலய ஊர்வல விழா விநாயகர் கோவிலில் தொடங்கி செக்கடி சுடலைமாடன் கோவில் அமராவதி அம்மன் கோவில் சந்தணமாரியம்ம் கோவில் வழியாக மன்றத்தை வந்தடைந்தது. தொடர்ந்து

2026 ஆண்டில் 10,12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசு வழங்கி கஞ்சி கலய விழாவை தென்காசி ஆதிபராசக்தி ஆன்மீக இயக்க மாவட்ட தலைவர் சக்தி திருமலை, மாவட்ட பொருளாளர் சக்தி ரமேஷ் ஆகியோர் தொடங்கி வைத்தனர் மேற்கு பகுதி இணைச்செயலாளர் சக்தி முருகன் கிழக்கு பகுதி சக்தி இளைஞரணி செயலாளர் சக்தி சுடலைச்சாமி தெற்கு பகுதி இளைஞரணி செயலாளர் சக்தி முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர் ,வழிபாட்டு மன்ற நிர்வாகிகள் சக்தி ஆனைமணி, ஆறுமுகபாண்டி முன்னிலை வகித்தனர் மேலும் வழிபாட்டு மன்ற சக்திகள் கோபால்ராமன், ராஜா, கௌதம் சிவா, பொன் கௌதம், வனபெவின், இளவரசு,செல்சின்,பொன் கமலேஷ் மற்றும் திரளான சக்திகள் கலந்து கொண்டு கஞ்சி கலயம் சுமந்து அன்னையை வழிபட்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சென்னெல்- நாட்டார்பட்டி ஆதிபராசக்தி வழிபாட்டு மன்ற தலைவரும் தென்காசி மாவட்ட இளைஞரணி செயலாளர் சக்தி விஜயசேகர் செய்திருந்தார்.

# நந்தா தொழில்நுட்ப கல்லூரியின் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா



குறிக்கோளாக கிராமப்புற மாணவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதில் குறிக்கோளாக கொண்டு 18வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தொழில்நுட்ப கல்லூரியின் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா இனிதே நடைபெற்றது.

இளநிலை மற்றும் முதுநிலை முதலாமாண்டு வகுப்புகளின் துவக்க விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர் பானுமதி சண்முகன் மற்றும் தமிழ்நாடு முன்னாள் காவல் துறை இயக்குனர் முனைவர் எம். இரவி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையேற்று உரையாற்றுகையில், 18வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தொழில்நுட்ப கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளும் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலிடமிருந்தும், தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்தும் உயரிய தரச்சான்றிதழ் பெற்றுள்ளதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.மேலும், எங்களின் முக்கிய குறிக்கோளாக விளங்கும் "அனைவருக்கும் வேலைவாய்ப்பு" என்கிற அடிப்படையில் மாணவர்களை தொழில்துறையின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப தயார் செய்யும் பொருட்டு பல்வேறு வகையான தொழில்முறை பயிற்சிகள்,பட்டறைகள் மற்றும் கருத்தரங்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

ஆதலால், மாணவர்கள் படிப்பு மற்றும் ஆளுமை மேம்பாட்டில் தங்கள் கவனத்தினை செலுத்தி நல்ல பழக்கங்களுடன் ஒழுக்கத்தினை கடைபிடித்து, பெற்றொர்களின் கனவுகளை நினைவாக்க எனது வாழ்த்துக்கள் என்று மாணவ மாணவிகளை வாழ்த்தினார்.

முன்னதாக கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். நந்தகோபால் அவர்கள் முதலாமாண்டு பயிலயிருக்கும் மாணவர்களையும், அவர்தம் பெற்றோர்களையும் வரவேற்றார்.


இவ்விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணைநிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி, பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் யு. எஸ். ரகுபதி, பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஜீ.மோகன்குமார் மற்றும் நந்தா தொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் கலந்து கொண்டு முதலாமாண்டு மாணவர்களை வரவேற்று வாழ்த்திப் பேசினார்கள்.

இதனை தொடர்ந்து, முன்னாள் காவல் துறை இயக்குனர் முனைவர் எம். இ.ரவி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், பள்ளி படிப்பினை முடித்து கல்லூரி பருவத்தில் நுழையும் தங்களுக்கு முதலில் மிகவும் தேவையானது தன்னம்பிக்கை ஆகும். இந்த தன்னம்பிக்கையினை தன்னுடைய தனி திறன்கள், அதிலுள்ள வழிப்புணர்வு மற்றும் பலவீனம் ஆகியவற்றினை முழுமையாக உணர்வதன் மூலம் வளர்த்துக் கொள்ளலாம். அதே சமயத்தில் எல்லாம் தெரியும் என்கிற அதீத நம்பிக்கையினை கைவிடுதல் அவசியமானது. இதனை முன்னெடுத்து, எதை, எப்போது,எந்த இடத்தில் செயல்படுத்தவேண்டும் என்கிற பட்சத்தில் வெற்றி வாய்ப்புகள் தன்னை வந்தடையும் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், நாள்தோறும் குறைந்தது ஆறு முதல் ஏழு மணி நேரம் உறக்கம், மாலை வேலையில் மைதானங்களில் குழுக்களாக இணைந்து விளையாடுவது,காலையில் நடத்தல்,மிதிவண்டி ஒட்டுதல் மற்றும் ஒடுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி உடலினை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். படிப்பு மற்றும் உடல் ஆரோக்கியத்தில் முறையான திட்டமிடுதலுடன் தெளிவான சிந்தனை, எண்ணங்கள் மற்றும் மனித மாண்போடு மிகுந்த ஆற்றல் வாய்ந்த மனிதர்களாக உருவாகவேண்டும் என்று கூறி மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் வாழ்த்தி நன்றி கூறினார்.

விழாவின் முடிவில், முதலாமாண்டு அறிவியல் மற்றும் மனிதநேயத் துறைத்தலைவர் முனைவர் என். விஜயகுமார் நன்றி கூறினார்.



# அடிப்படை வசதிகளை செய்து தராத காரமடை நகராட்சியை கண்டித்தும், விரைந்து அடிப்படை வசதிகள் செய்துதரக்கோரியும் மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆதி திராவிடர் நலத்துறை சப் டிவிஷனல் லெவல் ஆணைய உறுப்பினரிடம் மனு

நகராட்சி சார்பில் சொத்து வரி மற்றும் வீட்டு வரிகள் ( 650 முதல் 750 வரை) தவறாமல் வசூலிக்கப்பட்ட போதிலும்,எந்தவித அடிப்படை திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்று வரும் மக்கள் குறைதீர்ப்பு நாளில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி,காரமடை,மங்களகரைபுதூர், உள்ளிட்ட பகுதியில் வசிக்கும் மக்கள் மனு அளிக்க வந்தனர்.அந்த மனுவில்,காரமடை நகராட்சிக்கு உட்பட்ட மங்களக்கரை புதூர் அம்பேத்கர் நகரில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி தவித்து வரும் 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள், மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர். கடந்த 2022-ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் சார்பில், அம்பேத்கர் நகர் பகுதியில் 100 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. பட்டா பெற்ற மக்கள் அங்கு வீடுகளைக் கட்டி வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் குடிநீர் வசதி முற்றிலுமாக இல்லாததால், பொதுமக்கள் நாள்தோறும் 3கிலோமீட்டர் தூரம் வரை சென்று இருசக்கர வாகனங்களில் தண்ணீர் எடுத்து வரும் அவலநிலை நீடிக்கிறது.

மேலும் முறையான சாலை வசதி, கழிப்பறை வசதி மற்றும் சாக்கடை வடிகால் அமைப்புகள் எதுவும் நகராட்சி சார்பில் செய்து தரப்படவில்லை.

நகராட்சி சார்பில் சொத்து வரி மற்றும் வீட்டு வரிகள் ( 650 முதல் 750 வரை) தவறாமல் வசூலிக்கப்பட்ட போதிலும்,எந்தவித அடிப்படை திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கழிப்பறை வசதி இல்லாததால், பொதுமக்கள் மற்றும் பெண்கள் திறந்தவெளியைப் பயன்படுத்த வேண்டிய சூழல் உள்ளது. இதனால் விஷப்பூச்சிகள் மற்றும் பாம்புகளின் அச்சுறுத்தலுக்குஆளாகி அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த விமல்ராஜ் தெரிவிக்கையில், "பட்டா வழங்கி 4 ஆண்டுகள் ஆகியும் இதுவரை குடிநீர் உள்ளிட்ட எந்த அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. வரிகளை மட்டும் தவறாமல் வசூலிக்கும் நகராட்சி, எங்கள் கோரிக்கைகளைக் கண்டுகொள்ளாமல் அலட்சியம் காட்டுகிறது" எனக் ஆதங்கத்துடன் தெரிவித்தார். காரமடை நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து, உடனடியாக குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகளை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர், மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை நலத்துறை சப் டிவிஷனல் ஆணைய உறுப்பினர்சுரேஷ்குமார் ஆகியோரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர். அருந்ததியர் மக்களின் அடிப்படை பிரச்சனைகளை ஆதி திராவிட நலத்துறை துணை கோட்ட அளவிலான உறுப்பினர் சுரேஷ்குமார் மக்கள் குறைகளை கேட்டறிந்தார் இது சம்பந்தமாக ஆட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துரைத்து பிரச்சினைகளை சரி செய்து தருவதாக உறுதி அளித்தார்

# தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு சின்னமனூரில் மாநில அளவிலான சிலம்பப் போட்டி



தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா சின்னமனூர் உள்ள பி.எஸ் முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு உலக சிலம்ப விளையாட்டு சங்கம் மற்றும் வீரமங்கை வேலு நாச்சியார் சிலம்ப கலைக்கூடம்&அகாடமி இணைந்து நடத்தும் மாநில அளவிலான சிலம்பப் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியானது உலக சிலம்ப விளையாட்டு சங்கம் மாவட்டச் செயலாளரும் வீரமங்கை வேலுநாச்சியார் சிலம்பக் கலைக்கூடம் மற்றும் அகாடமியின் ஆசானமான ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக மாநிலத் தலைவர் சுதாகர் கலந்து கொண்டார் துவங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து சென்னை கோயம்புத்தூர் மதுரை திருப்பூர் என சுமார் 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து நான்கு வயதில் முதல் 14 வயது வரை உள்ள மாணவ மாணவிகள் என 800க்கும் மேற்பட்டோர் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

நடுவர்கள் வைத்து காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற்ற போட்டியானது வயது வாரியாக மாணவ மாணவியர்களுக்கு முதலாம் பரிசு இரண்டாம் பரிசு மூன்றாம் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது அதேபோல் ஆட்டநாயகன் பரிசுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பி.எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி உரிமையாளர் முத்து கல்வன் மற்றும் பெற்றோர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு கண்டு களித்தனர்.

# புதிய டிசைனில் வேட்டி, சேலை வழங்க முடிவு; அமைச்சர் விஜய் பாலாஜி விளக்கம்



தமிழ்நாட்டில் 4-ல் 3 பங்கு மக்கள் 4 முழ வேட்டியையே விரும்புவதால், 2027-ம் ஆண்டு பொங்கல் திருநாளில் 4 முழ வேட்டி வழங்கப்படும் என்று கைத்தறி,துணிநூல் மற்றும் கதர் துறை அமைச்சர் விஜய் பாலாஜி தெரிவித்தார். சட்டசபையில் திமுக எம்.எல்.ஏ. ஆஸ்டின், பொங்கல் திருநாளில் வழங்கப்படும் விலையில்லா வேட்டியின் அளவை 8 முழத்தில் இருந்து 4 முழமாக குறைத்திருப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டினார். இதற்கு பதிலளித்த அமைச்சர் விஜய் பாலாஜி கூறியதாவது:-

தவெக அரசு பொறுப்பேற்ற பிறகு பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களில், பல ஆண்டுகளாக ஒரே ரகத்தில் வேட்டி, சேலைகள் வழங்கப்படுவதாகவும், இந்த முறை புதிய வடிவமைப்பில் வழங்கவேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்தன. இதையடுத்து முதல்-அமைச்சரின் உத்தரவின்பேரில் அனைத்து மாவட்டங்களிலும் துறைச் செயலாளர்கள் மற்றும் சரக அதிகாரிகள் மூலம் பொதுமக்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. இதில் பெரும்பாலானோர் வெளுக்கப்படாத 8 முழ வேட்டிக்கு பதிலாக வெளுக்கப்பட்ட 4 முழ வேட்டியே விருப்பம் என தெரிவித்தனர். அதன் அடிப்படையில்தான் 4 முழ வேட்டியும், ஜரிகை தைத்த சேலையும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், திருவள்ளூர் சரகத்தில் பெடல் தறிகளில் தொடர் வேலைவாய்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 5 லட்சத்து 25 ஆயிரம் சேலைகளையும் அரசு கொள்முதல் செய்யும். நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக அரசு வழங்கிய மூலப்பொருட்கள் மூலம் தயாரிக்கப்பட்ட வேட்டி, சேலைகளும் முழுமையாக கொள்முதல் செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் விஜய்பாலாஜி தெரிவித்தார்.

# மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக புதிய திட்டங்கள்; சட்டசபையில் அமைச்சர் ஜெகதீஸ்வரி அறிவிப்பு



உயரம் குறைந்த மாற்றுத்திறனாளிகளின் அன்றாட பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் பெட்ரோல் அல்லது மின்சாரத்தில் இயங்கும் உபகரணங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 10 இல்லங்கள் அமைக்க ரூ.1.82 கோடியும்,அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்கள் அமைக்க ரூ.1.77 கோடியும் ஒதுக்கப்படும்.

மேலும், முதுகுத்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக 2 இல்லங்கள் ரூ.49 லட்சம் செலவில் அமைக்கப்படும். மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக அறிவுசார், செவித்திறன் மற்றும் பார்வை குறைபாடுகளுக்கு ஏற்ப மொத்தம் 6 ஆண்டு நிலை பயிற்சி மையங்கள் அமைக்க ரூ.97 லட்சம் ஒதுக்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் மனநலம்பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகள் என 100 பேர் பயன்பெறும் வகையில் 1.5 ஏக்கர் பரப்பளவில் 2 இல்லங்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும். இலவச பேருந்து பயணம்

தனித்து பயணம் செய்ய இயலாத மாற்றுத்திறனாளிகள், UDID அட்டையை பயன்படுத்தி தங்களுடன் ஒரு துணையாளருடன் மாநகர, நகர தாழ்தள, விரைவு, டீலக்ஸ், புறநகர் மற்றும் மலைப்பகுதி பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யும் வகையில் திட்டம் விரிவுபடுத்தப்படும்.செவித்திறன் குறைபாடுடைய மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் மெய்நிகர் கற்றல் முறையை அறிமுகப்படுத்த ரூ.64 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும்,பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்விக்கு உதவும் வாசிப்பாளர்களுக்கான உதவித்தொகையும் 2026-27-ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட உள்ளது.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகளின் கல்வி, வேலைவாய்ப்பு, பயணம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 9 புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.



ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் நேற்று (31.08.2026)ஆகஸ்ட் மாத மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற்றது. உடன் ஆணையாளர் அர்பித் ஜெயின் , துணை மேயர் வே.செல்வராஜ் , மண்டலத்தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஆர்.என்.புதூர் அரசு செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்பு பள்ளியில் 10,12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாற்றுத்திறனாளி மாணவ,மாணவியர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் நேற்று (31.08.2026) பாராட்டுச்சான்றிதழ்களைவழங்கினார். உடன் மாற்றுத்திறனாளிகள்நல அலுவலர்சங்கர்கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் நேற்று (31.08.2026) பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.

# சாலையோர மரங்களை காக்க களமிறங்கிய வீ தி லீடர்ஸ்

## மரங்களில் அடிக்கப்பட்ட ஆணிகள், விளம்பரத் தட்டிகள் அகற்றம்

## ஈரோட்டில் இயற்கைப் பாதுகாப்புப் பணி தொடக்கம்



தமிழகத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் சாலையோரங்களில் உள்ள மரங்களில் ஆணிகளை அடித்து விளம்பரத் தட்டிகள் மற்றும் பலகைகள் பொருத்தப்படுவதால், மரங்களின் இயற்கையான வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு, மரத்தின் திசுக்களும் சேதமடையும் நிலை உருவாகியுள்ளது. ஏற்கனவே வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறை காரணமாக தமிழகம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், மரங்களைப் பாதுகாப்பதன் மூலம் சுற்றுச்சூழலையும் மழைவளத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனை வலியுறுத்தி, சாலையோர மரங்களில் அடிக்கப்பட்டுள்ள ஆணிகளை அகற்றி, உரிய அனுமதியின்றி பொருத்தப்பட்டுள்ள விளம்பரத் தட்டிகள் மற்றும் பலகைகளை நீக்கி மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், இது அரசின் கடமை என்றும் வலியுறுத்தி, வீ த லீடர்ஸ் தன்னார்வலரான, ஈரோடு அக்னி ராஜேஷ் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தார்.

இது தொடர்பாக கோரிக்கை மனு எண்: TN/HWY/ERD/I/PORTAL/21 AUG26/18835609 மூலம் அளிக்கப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்ட தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறை அளித்துள்ள பதிலில், மாநில நெடுஞ்சாலைகளில் சாலையோர மரங்களில் ஆணி அடித்து, உரிய அனுமதி இன்றி பொருத்தப்பட்டுள்ள விளம்பரத் தட்டிகள் மற்றும் பலகைகள் அகற்றப்பட்டு வருவதாகவும், எதிர்காலத்தில் மரங்களில் ஆணி அடித்து விளம்பரப் பொருட்கள் பொருத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் சாலைப் பணியாளர்கள் மூலம் விளம்பரதாரர்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் சாலையோர மரங்களில் அடிக்கப்பட்டுள்ள ஆணிகளை தமிழக அரசு உடனடியாக முழுமையாக அகற்றி மரங்களைப்பாதுகாக்க வேண்டும் என்றும், நெடுஞ்சாலைத்துறை சார்பில் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகளின் பாதுகாப்பிற்காக மரங்களில் ஆணி அடித்து பொருத்தப்பட்டுள்ள ஒளிரும் ஸ்டிக்கர்கள் மற்றும் பிரதிபலிப்பு பலகைகளை அகற்றிவிட்டு, மரங்களுக்கு பாதிப்பு ஏற்படாத மாற்று முறையில் அவற்றை பொருத்த வேண்டும் என்றும் வீ தி லீடர்ஸ் சார்பில் தமிழக அரசுக்கு நேற்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஈரோடு பகுதிகளில் சாலையோர மரங்களில் விளம்பரதாரர்கள் அடித்துள்ள ஆணிகளை அகற்றி, விளம்பரத் தட்டிகளை நீக்கி, மரங்களைப் பாதுகாக்கும் புனிதமான இயற்கைப் பாதுகாப்புப் பணியை வீ தி லீடர்ஸ் தன்னார்வலர்கள் நேற்று 30.08.2026 ஈரோடு மாநகர் பெருந்துறை ரோடு, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலக பேருந்து நிறுத்தம் அருகில் இருந்து தொடங்கினர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வீ தி லீடர்ஸ் தன்னார்வலர்கள், சாலையோர மரங்களில் அடிக்கப்பட்டிருந்தஆணிகளைப் பிடுங்கி அகற்றியதுடன், மரங்களில் பொருத்தப்பட்டிருந்த விளம்பரத் தட்டிகளையும் அகற்றி மரங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வு குறித்து பத்திரிகையாளர்களிடம் பேசிய வீ தி லீடர்ஸ் தன்னார்வலர் ஈரோடு அக்னி ராஜேஷ், தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சாலையோர மரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், விளம்பர நோக்கத்திற்காக மரங்களை சேதப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், ஒரு மரத்தைக் காப்போம்... ஆயிரம் உயிர்களைக் காப்போம்!" என்ற நோக்கத்துடன் இந்த இயற்கைப் பாதுகாப்புப் பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும், தமிழகம் முழுவதும் மரங்களில் அடிக்கப்பட்டுள்ள ஆணிகளை அகற்றி மரங்களைப் பாதுகாக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தப் புனிதமான இயற்கைப் பாதுகாப்புப் பணியில் வீதலீடர்ஸ்தன்னார்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டு, மரங்களில் இருந்த ஆணிகளை அகற்றி, பசுமையைப் பாதுகாக்கும் தங்களது சமூகப் பொறுப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வீதலீடர்ஸ்தன்னார்வலர்கள் அக்னி ராஜேஷ், எஸ்.ஆர். சுப்பிரமணியம், சுமதி , ரவீந்திரன்,ரமேஷ்,மணப்பாறை சந்திரசேகரன் , அண்ணாதுரை, ஹரிஹரன் , சின்னசாமி, சேகர் ,சக்தி, பாஸ்கர் , ராஜவேல் பிரபு , கோவிந்தராஜ் ஆகியோர்பங்கேற்றுவிழாவை சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் நேற்று (31.08.2026) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.

# நேபாளத்தில் பெற்றோர் மாயம்: 3 நாட்கள் தேடியும் பலனின்றி ஈரோடு திரும்பிய மகன்



ஈரோடு:

நேபாள வெள்ளத்தில் சிக்கி மாயமான பெற்றோரை 3 நாட்களாக தேடியும் தகவல் கிடைக்காததால், அவர்களது மகன் ஏமாற்றத்துடன் ஈரோடு திரும்பினார்.

ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டை அடுத்தகனகபுரத்தைச் சேர்ந்தவர் நடராஜன் (67). இவரது மனைவி கிருஷ்ணவேணி (56). இருவரும் ஈரோட்டில் உணவகம் நடத்தி வருகின்றனர்.

கடந்த 14-ம் தேதி, நாமக்கல்லைச் சேர்ந்த உறவினர்கள் 9 பேருடன் சென்னையில் உள்ள சுற்றுலா நிறுவனம் மூலம் நேபாள நாட்டின் காத்மாண்டுவுக்குச் சென்றனர்.அங்கிருந்து பல்வேறு ஆன்மிகச் சுற்றுலாத் தலங்களுக்குச் சென்றனர்.

கடந்த 25-ம் தேதி காலை நடராஜனும், கிருஷ்ண வேணியும் தங்களதுமகன்கவின்ராஜை செல்போனில் தொடர்புகொண்டு பேசினர். மறுநாள் காலை, அவர்கள் சுற்றுலா சென்ற நேபாளத்தின் வடக்கு எல்லையை ஒட்டிய ரசுவா மாவட்டத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டது.

இதனால் அச்சமடைந்த கவின்ராஜ் தனது பெற்றோரைத் தொடர் புகொள்ள முயன்றபோது, அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதையடுத்து பதற்றமடைந்த கவின்ராஜ், கடந்த 27-ம் தேதி ஈரோட்டில் இருந்து புறப்பட்டு பெங்களூரு சென்று, அங்கிருந்து விமானம் மூலம் காத்மாண்டு சென்றார். =

அங்கு மருத்துவ முகாம்கள், ராணுவ முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 3 நாட்களாகத் தேடியும் பெற்றோர் குறித்த எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இதனால் ஏமாற்றத்துடன் அவர் ஈரோடு திரும்பினார்.

இதுகுறித்து கவின்ராஜ் கூறுகையில், "வெள்ளம் ஏற்பட்ட நாளன்று எனது பெற்றோர் மற்றும் அவர்களுடன் சென்ற குழுவினர் நேபாள எல்லைப் பகுதியில் உள்ள பாஸ்போர்ட் சரிபார்ப்பு அலுவலகக் கட்டிடத்தில் இருந்தனர். அப்போது ஏற்பட்ட பெருவெள்ளம் அந்தக் கட்டிடத்தைச் சூழ்ந்தது. தற்போது அந்தக் கட்டிடத்தைச் சுற்றி 30 அடிக்கும் மேல் சகதியும், சேறும் சேர்ந்துள்ளதால் மீட்புப் பணி சவாலாக உள்ளது. வெள்ளத்தில் மாயமானவர்கள் பட்டியலில் எனது பெற்றோரின் பெயர்களையும் நேபாள அரசு சேர்த்துள்ளது" என கண்ணீருடன் தெரிவித்தார்.

# India's GDP grows 7.8% in AprilJune, beats expectations

India's economy expanded faster than expected in the April-June quarter, easing fears that the Iran war would sharply weaken growth and underscoring the resilience of Asia's third-largest economy.

Gross domestic product climbed 7.8% from a year earlier in the first quarter of the fiscal year that started in April, data from the Ministry of Statistics and Programme Implementation showed Monday. That was above the median estimate of 7.3% in a Bloomberg survey of economists, but matches the 7.8% expansion in the previous quarter.



The Reserve Bank of India had forecast 7% growth for the April-June quarter and expects the economy to expand 6.7% this fiscal year.

The stronger performance reinforces the government's recent pitch to global investors that India can withstand external shocks. The South Asian nation has been particularly exposed to the closure of the Strait of Hormuz, a key route for oil shipments to a country that imports nearly 90% of its crude.

India remains the world's fastest-growing major economy, but the pace falls short of the 9.25% annual growth the government estimates is needed to achieve Prime Minister Narendra Modi's goal of developed-nation status by 2047.

Stronger growth could complicate the outlook for interest rates. The RBI kept its benchmark rate unchanged at 5.25% in August, though policymakers have signaled that a hike may be needed later this year if inflationary pressures build.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.